# சாதாரணக்கூட்டம்

2023–ம் ஆண்டு, மார்ச் மாதம் 30ம் தேதி வியாழன் கிழமை **காலை 11.00 மணிக்கு** பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**திரு.மோ.செல்வராஜ்,**
**தலைவர்**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

## பொருள் எண்.1

பள்ளிபாளையம் நகர திராவிட முன்னேற்ற கழக மாவட்ட பிரதிநிதியும் மற்றும் நகர் மன்ற தலைவருமான திரு.எம்.செல்வராஜ் அவர்கள் முன்னாள் முதல்வர் திரு.மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா தொடர்பாக அனுமதி கோரியுள்ளார் விவரம் பின்வருமாறு.

குறளோவியர் படைத்த குறிஞ்சி மலர்... மறத் தமிழர் பெருமைதனின் மறுபதிப்பு... தறிகெட்டு ஓடி தடம் மாறி நின்ற அரசாங்க தேரை, நெறிபடுத்தி திராவிட திசை வழியே வழி நடத்த வந்த தேர்ந்த தேர்ப்பாகன்... சொல்லியது மட்டுமல்ல... சொல்லாத வாக்குறுதிகளையும் செயல்படுத்தி நல்லாட்சி நடத்தி வரும் தமிழ்நாட்டின் முதல்வர், தலைவர் தளபதி அவர்களை... நற்றமிழ் கூறும் நல்லுலகிற்கு வாராது வந்த மாமனியாய் தந்த காவிய கலைஞர்... கல் தோன்றி மண் தோன்றா காலத்தே....முன் தோன்றிய மூத்த குடியாம் தமிழினத்தின் ஓங்கு புகழினை காலப் பொன்னேட்டில் கவினுற பதியச் செய்த திராவிட செம்மல்... ஐந்து முறை தமிழக முதல்வராக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து ‘‘மக்களால் அரசு...மக்களுக்கான அரசு’’ எனும் மாபெரும் ஜனநாயக பாதையில் ஆட்சி சக்கரத்தை சுழலச்செய்து மக்கள் பணி ஆற்றியவர். தமிழ் தாயின் மூத்த மகன் பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாய் 50 ஆண்டுகள் திராவிட முன்னேற்ற கழகத்தின் தன்னிரகற்ற தலைவராய் வீற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்த நாள் நூற்றாண்டு விழா வருகின்ற 03.06.2023ந் தேதி முதல் திராவிட திருவிழாவாக தமிழ் நாடெங்கும் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. தமிழ்த் தாயின் தவப்புதல்வர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை போற்றி சிறப்பிக்கும் வகையில் பள்ளிபாளையம் நகரம் ஆற்றுப் பாலத்தின் முகப்பு பகுதியில் தமிழ் பெருமகனார் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை அமைக்கவும், நூற்றாண்டு விழா துவக்கமாக, பொது வாழ்வில் பவளவிழா கண்ட பன்முகக் கலைஞர் திருமகனின் போற்றத்தக்க 94 ஆண்டுகால வாழ்க்கைப் பயணத்தில் 80 ஆண்டுகால பொது வாழ்க்கை பங்களிப்பை குறிக்கும் வகையில் 80 அடி உயர இருவண்ண கழகக் கொடிகம்பம் அமைத்திடவும், உரிய அனுமதி வழங்கிட கேட்டுக் கொண்டுள்ளார். மேற்கண்ட விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். கோப்பு எண்.249/2023/எப்1

**தீர்மான எண்.42 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர் திருமதி.மு.தாமரை அவர்களின் மார்ச் –2023 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1554/2014/சி1

**தீர்மான எண்.43 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

பள்ளிபாளையம் நகராட்சியில் பிப்ரவரி மாதம் 23.02.2023 –ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது.

(ரூ. லட்சத்தில்)

| வ. எண். | வரியின விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 1.95 | 195.07 | 5.28 | 184.2 | 3.67 | 10.87 |
| 2. | காலியிட வரி | 1.58 | 3.37 | 1.58 | 3.37 | 0 | 0 |
| 3. | தொழில்வரி | 16.80 | 17.01 | 3.51 | 16.65 | 13.29 | 0.36 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 17.14 | 70.89 | 11.64 | 65.45 | 5.50 | 5.44 |
| 5 | வரியில்லா இனம் | 0 | 20.87 | 0 | 20.87 | 0 | 0 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 3.93 | 47.44 | 3.37 | 45.84 | 0.56 | 1.60 |
| | மொத்தம் | **48.4** | **354.65** | **25.38** | **336.39** | **23.02** | **18.26** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1523/2013/சி1

**தீர்மான எண்.44 நாள். 30.03.2023**

பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் எண்.4**

பள்ளிபாளையம் நகராட்சியின் 2022–2023ம் ஆண்டு வரவு செலவு மற்றும் திட்டப் பணிகள் சம்மந்தமான திருத்திய மதிப்பீடு மற்றும் 2023–2024ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மற்றும் நிர்வாகம் மற்றும் திட்டப்பணிகள் சம்பந்தமான திட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிகலாம்.

கோப்பு எண்.14/2023/சி1

**தீர்மான எண்.45 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

பள்ளிபாளையம் நகராட்சி புதன் சந்தை பகுதியில் 24.05.2015ம் தேதி முதல் அம்மா உணவகம் செயல்பட்டு வருகின்றது. அம்மா உணவகத்திற்கு தினசரி தேவைப்படும் உணவு பொருட்கள் தயார் செய்ய அரிசி, மளிகை பொருட்கள், எரிவாயு, பால், காய்கறி பொருட்கள் எழுது பொருட்கள் வாங்கவும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டியுள்ளது. எனவே 2023–2024ம் ஆண்டிற்கு, ஏற்படும் தோராய செலவினத் தொகை ரூ.35,00,000/–ஐ பொதுநிதியில் மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

கோப்பு எண்.24/2023/எச்1

**தீர்மான எண்.46 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.6</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், சலான்கள் மற்றும் ரசீதுகள் 2023–2024ம் ஆண்டிற்கு (ஒரு ஆண்டிற்கு) அலுவலகத்தின் தேவைக்கேற்ப அரசு அங்கீகரிக்கப்பட்ட அல்லது கூட்டுறவு நிறுவனத்தில் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டிற்குள் வாங்கிக் கொள்ளவும் அதற்காகும் செலவினத் தொகையை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அலுவலகத்தின் தேவைக்கேற்ப அரசு அங்கீகரிக்கப்பட்ட அல்லது கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து 2023–2024ம் ஆண்டிற்கு வாங்க மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

கோப்பு எண்.319/2023/அ2

**தீர்மான எண்.47 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது,

**<u>பொருள் எண்.7</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு தேவையான கணினி சம்மந்தமான பொருட்கள் 2023–2024ம் ஆண்டிற்கு (ஒரு ஆண்டிற்கு) அலுவலகத்தின் தேவைக்கேற்ப அரசு அங்கீகரிக்கப்பட்ட அல்லது கூட்டுறவு நிறுவனத்தில் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்குள் வாங்கிக் கொள்ளவும் அதற்காகும் செலவினத் தொகையை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அலுவலகத்தில் கணினியின் உபயோகத்திற்கு ஏற்ப அரசு அங்கீகரிக்கப்பட்ட அல்லது கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து 2023–2024ம் ஆண்டிற்கு வாங்க மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

கோப்பு எண்.319/2023/அ2

**தீர்மான எண்.48 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.8</u>**

நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் உள்ள பொது இடங்கள், வாரச்சந்தை பகுதிகள், பள்ளிகள் அமைந்துள்ள இடங்கள், பாலம் ரோடு, பஸ் நிறுத்தம் மற்றும் இதர பொது இடங்களில் கிருமி நாசினி, செய்ய நீர்த்த சுண்ணாம்பு தூள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்பொது எதிர்வரும் 2023–2024–ம் நிதியாண்டிற்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு தூளை, நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.10608/2021/எச்1 நாள்.10.11.2021 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விலையான டன் 1–க்கு ரூ.9000/– மும், GST 5% தொகை ரூ.450/– ஆகமொத்தம் 1டன்னுக்கு ரூ.9450/– என்ற விகிதத்தல் 60 டன்னுக்கு (60X9450=567000) ரூ.5,67,000/–க்குள் M/s. D.D. 165,பென்னாகரம் வட்ட வேளாண்மை

உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், பென்னானரம் என்ற அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனத்தில் கொள்முதல் செய்யவும், இச்செலவினத் தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழுங்காலம்.
2. பொதுசுகாதார பணிகளுக்கு தேவையான சுண்ணாம்பு தூளை ரூ.5,67,000/–குள் அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனமான M/s. D.D. 165,பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், பென்னாகரம் என்ற கூட்டுறவு நிறுவனத்தில் கொள்முதல் செய்ய, மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.321 /2023/எச்1

**தீர்மான எண்.49 நாள். 30.03.2021**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.9</u>

பள்ளிபாளையம் நகராட்சி பொதுசுகாதாரம் பூச்சிகள், காற்று, மற்றும் தண்ணீர் மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா மற்றும் மஞ்சள் காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்தும் பணிக்கு பிளிச்சிங்பவுடர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே எதிர்வரும் 2023– 2024 –ம் ஆண்டுக்கு தேவையான பளிச்சிங் பவுடரை கொள்முதல் செய்ய, நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.10608/2021/எச்1 நாள்.10.11.2021–ல் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகிதமான 1 டன் ரூ.40,000/– மற்றும் GST 18% தொகை ரூ.7,200/–ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.47200/– ஆகும். எனவே நடப்பாண்டுக்கு 36 டன் பிளிச்சிங் பவுடரை கொள்முதல் செய்ய உரிய செலவினத் தொகையான ரூ.16,99,200/– ஆகும். எனவும் இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும்,மேற்காணும் பிளிச்சிங்பவுடரை M/s. D.D. 165,பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், பென்னாகரம் என்ற அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழுங்கலாம்.
2. பொதுசுகாதார பணிகளுக்கு தேவையான பிளிச்சிங்பவுடர் ரூ.16,99,200/–குள் அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனமான M/s. D.D. 165,பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், பென்னாகரம் என்ற கூட்டுறவு நிறுவனத்தில் கொள்முதல் செய்ய, மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.322/2023/எச்1

**தீர்மான எண்.50 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.10</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பொதுநிதி திட்டம் 2022-2023 ன் கீழ்கண்ட வேலை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 09.03.2023 – ம் தேதி வியாழக்கிழமை அன்று கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>பொதுநிதி திட்டம் –2022-23</u>**<br>புதியதாக கணினி 5 எண்ணிக்கை மற்றும் 3 Web Camera எண்ணிக்கைகள்<br>கொள்முதல் செய்தல் | 6,80,000/- | ஜிஎஸ்சி டெக்னாலஜி,<br>39டி, ஆர்.பி காம்பளக்ஸ்,<br>பள்ளிபாளையம் ரோடு,<br>குமாரபாளையம் – 638 183. | 0.18% குறைவு |
| | | | திரு.டி.சுரேஷ்<br>11ஜெ, ஆவாரங்காடு மேற்கு<br>பள்ளிபாளையம். | 0.85 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.18% குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக கொடுத்த ஒப்பந்ததாரர், ஜிஎஸ்சி டெக்னாலஜி என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1665/2022/இ1

**தீர்மான எண்.51 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.11</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்வதற்கான அறிவிப்பினை ஒரு தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் ஒரு மாநில அளவிலான ஆங்கில தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. எனவே, மேற்கண்ட பணிக்கான விளம்பரம் செய்ததற்காக M/s.Vipras adz சென்னை அவர்களுக்கு ரூ.60,375/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.646/2023/இ1

**தீர்மான எண்.52 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.12</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையம் சமயசங்கிலி கிராமத்தின் காவேரி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இந்நீரேற்று நிலையத்திலிருந்து அக்ரஹாரம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, அங்கு சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், தலைமை நீரேற்று நிலையம் அமைந்துள்ள இடத்தின் அருகாமையில் அமைந்துள்ள மின்வாரிய கதவணையில், வருடாந்திர பராமரிப்பு காரணமாக அனைத்து ஷட்டர்களும் திறக்கப்பட்டுள்ளதால், நகராட்சி நீரேற்று நிலையத்திற்கு தண்ணீர் வரத்து குறைந்துள்ளது. இதனால், நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் நிலை உள்ளது. மின்வாரிய பராமரிப்பு பணி மார்ச் 25ம் தேதி வரை (10.03.2023 முதல்15 நாட்கள்) நடைபெறவுள்ளதால், மேற்சொன்ன குறைவான தண்ணீர் வரத்து தொடரும் பட்சத்தில் தினந்தோறும் குடிநீர் விநியோகம் தடைபடும் என்பதால், நகராட்சி வசம் உள்ள நான்கு மின் மோட்டார்கள் மற்றும் HDPE குழாய்கள் ஆகியவற்றை ஆற்றின் நடுவே தண்ணீர் ஆழம் உள்ள பகுதியில் இறக்கி அதன் மூலம் தண்ணீரை கிணற்றுக்கு கொண்டு வர வேண்டியுள்ளது. மேலும், கடந்த ஆண்டு காவேரி ஆற்றில் 3லட்சம் கன அடி வரை தண்ணீர் வரத்து இருந்த காரணத்தினால், கிணற்று பகுதியில் இருந்து ஆற்றின் நடுப்பகுதிக்கு செல்லும் வழி மண் மூடி உள்ளதால் மோட்டார் மற்றும் குழாய்களை கொண்டு செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனை Hitache வாகனம் மூலம் அப்புறப்படுத்தவும், 15 நாட்களுக்கு இரவு பகலாக மோட்டாரினை இயக்கி குடிநீர் விநியோகம் தடைபடாமல் இருக்க இப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு அதற்கான செலவினம் ரூ.53,000/—ஐ பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.0289 /2023/இ1

**தீர்மான எண்.53 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.13</u>**

பள்ளிபாளையம் நகராட்சியின் குடிநீர்நிதி திட்டம் மோட்டார் கொள்முதல் 2022—23 ன் கீழ்கண்ட வேலை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 16.03.2023 — ம் தேதி வியாழக்கிழமை அன்று கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>**குடிநீர்நிதி திட்டம் மோட்டார் கொள்முதல் 2022-23**</u><br><br>பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அக்ரஹாரம் பழைய தலைமை நீரேற்று நிலையத்திற்கு 30 எச்.பி திறன் கொண்ட புதிய | 4,50,000/- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327,கே.எஸ் | 0.22%குறைவு |
| | | | ஸ்ரீ வீரமாத்தி அம்மன் டிரேடார்ஸ், 344,சுடமுத்தான்பட்டி சிங்கம்பேட்டை, பவானி | 0.92%அதிகம் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.22% குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக கொடுத்த ஒப்பந்ததாரர், M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.253 /2022/இ1

**தீர்மான எண்.54 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.14</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளிலும் உள்ள மொத்தம் 1393 தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் மூன்று மின்பணியாளர் பணியிடங்களில் இரண்டு மின்பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். தெருவிளக்கு பராமரிக்க மின்கம்பியாளர் பணியிடம், மின்கம்பி உதவியாளர் பணியிடம் இந்நகராட்சியில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதன் காரணமாக இரண்டு மின்பணியாளரை கொண்டு 1393 தெருவிளக்குகளையும் பராமரிப்பதற்கு சிரமமாக உள்ளது. அதனால் தெருவிளக்கு பராமரிப்பு பணி சரியாக செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே தெருவிளக்கு பராமரிப்பு பணியினை ஒப்பந்த முறையில் மேற்கொள்ள இரண்டு மின் பணியாளர்களையும், இரண்டு மின்கம்பி உதவியாளர்களையும் கொண்டு பணிமேற்கொள்ள கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பிப்ரவரி மாதத்துடன் முடிவுறுவதால் மறுஒப்பந்தப்புள்ளி இதே நிலை தொடர்வதற்கு அதே விலைப்புள்ளிக்கு மார்ச் 2023 மாதம் முதல் மே 2023 மாதம் வரை 3 மாதத்திற்கு நீட்டிப்பு செய்ய ஆகும் செலவினம் ரூ. 2,40,000/–க்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.555 /2022/இ1

**தீர்மான எண்.55 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.15</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து செல்லும் குழாய் பராமரிப்பு பணி, குடிநீர் பகிர்மானக் குழாய் பழுது பராமரிப்பு பணி, கழிப்பிடங்களில் உள்ள குழாய் பராமரிப்பு பணி போன்ற பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் இல்லாத நிலையில், தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்சொன்ன பணிகளை மேற்கொள்வது அவசியமாகும். எனவே, ஆழ்துளைக் கிணறு மூலமாக தண்ணீர் விநியோகம் செய்ய பயன்படும் குழாய் பராமரிப்பு, கழிப்பிடக் குழாய், பகிர்மானக் குழாய் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஐந்து தற்காலிக பணியாளர்களை கொண்டு பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதன் அடிப்படையில் ஆட்கள் பெறப்பட்டு பணி மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஒப்பந்தப்புள்ளி பிப்ரவரி மாதத்துடன் முடிவுறுவதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை அதே ஒப்பந்ததாரருக்கு அதே விலைப்புள்ளிக்கு மார்ச் 2023 மாதம் முதல் மே 2023 மாதம் வரை 3 மாதத்திற்கு நீட்டிப்பு செய்ய ஆகும் செலவினம் ரூ.2,00,000/—க்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.<u>983/2022/இ1</u>

**தீர்மான எண்.56 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.16</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் அவர்கள் அரசின் முக்கிய திட்டங்கள் குறித்து திறந்த வெளியில் விளம்பரம் மேற்கொள்ள பள்ளிபாளையம் காவேரி ஆறு புதுப்பாலம் மற்றும் புதன் சந்தை அம்மா உணவகம் அருகில் 10 x 12 அடி என்ற அளவில் விளம்பர வடிவமைப்புகள் (flex) தயார் செய்து நிறுவி விளம்பரம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல்

அவர்களின் அறிவுரையின் படி மேற்கண்ட இரண்டு இடங்களில் 10 X 12 அடி விளம்பர பலகை (flex) தயார் செய்ய ஆகும் செலவினம் ரூ.60,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.304/2023/இ1

தீர்மான எண்.57 நாள். 30.03.2023

அங்கீகரிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.17</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் அவர்கள் அரசின் முக்கிய திட்டங்கள் குறித்து திறந்த வெளியில் விளம்பரம் மேற்கொள்ள பள்ளிபாளையம் காவேரி ஆறு புதுப்பாலம் மற்றும் புதன் சந்தை அம்மா உணவகம் அருகில் 10 x 12 அடி என்ற அளவில் விளம்பர வடிவமைப்புகள் (flex) தயார் செய்து நிறுவி விளம்பரம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் அவர்களின் அறிவுரையின் படி மேற்கண்ட இரண்டு இடங்களில் 10 X 12 அடி விளம்பர பலகை (flex) தயார் செய்ய 06.03.2023–ம் தேதி கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தரணி ஸ்டிக்கர்ஸ்<br>டிஜிட்டல் பிளக்ஸ் & இன்ஜெக்ட் பிரிண்டிங், நாமக்கல் | ரூ. 28,900/– |
| 2 | ப்ளூம்ஸ் கார்ட்ஸ்.,<br>LMR Arcade, LVB அருகில்,சேலம் ரோடு, நாமக்கல். | ரூ.31,350/– |
| 3 | R.K. ஸ்டிக்கர்ஸ்,<br>6/24- A5 பரமத்தி ரோடு, சிட்கோ எதிரில்,<br>நாமக்கல் | ரூ.31,350/– |

அலுவலக குறிப்பு

1). மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய தரணி ஸ்டிக்கர்ஸ், நாமக்கல் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

2). மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண்.304/2023/இ1

**தீர்மான எண்.58 நாள். 30.03.2023**

அங்கீரிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகளை ஓராண்டு சாதனைகளாக தினமலர் நாளிதழில் 26.01.2023 வியாழக்கிழமை அன்று விளம்பரம் செய்யப்பட்டது. எனவே, விளம்பர செய்ததற்காக தினமலர் நாளிதழுக்கு ரூ.10206/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண்.0181/2023/இ1

**தீர்மான எண்.59 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகளை ஓராண்டு சாதனைகளாக கால் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. எனவே, விளம்பர செய்ததற்காக கால் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் நாளிதழுக்கு ரூ.9975/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.0182/2023/இ1

**தீர்மான எண்.60 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.20</u>**

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 வாய்கால் சாலை பகுதியில் புதிய தெருவிளக்கு அமைக்க நகர்மன்ற தலைவர் வாயிலாக நகர்மன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்க்கண்ட பகுதிக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் நகர் பிரிவிற்கு கேட்பு கட்டணம் ரூ.16700/—ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்க்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.898/2021/இ1

**தீர்மான எண்.61 நாள். 30.03.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.21</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மயான வளாகத்தில் ரூ.180.00 இலட்சத்தில் புதிதாக எரிவாயு தகன மேடை அமைக்க, நமக்கு நாமே திட்டம் 2022—2023ன் கீழ் அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.038 /2022/இ1

**தீர்மான எண்.62 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.22</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகம் கொமராபாளையம் சாலையில் செயல்பட்டு வருகிறது. இந்த உணவகத்தில் நாள்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் வருகை தந்து உணவினை உண்டு வருகின்றனர். இந்நிலையில், உணவகத்தில் பயன்பாட்டில் இருந்து வந்த 2014ம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட D-Freezer (குளிர்சாதனப் பெட்டி) இயங்காமல் நின்று விட்டதால், பால் போன்ற பொருட்களை பதப்படுத்த முடியாமல் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். உடனடியாக பழுதான குளிர்சாதனப்

பெட்டியினை உள்ளூர் பழுது நீக்குபவர் கொண்டு பரிசோதித்த பொழுது குளிர் சாதனப் பெட்டியினுள் உள்ள Compressor மற்றும் பெட்டியின் உட்புறமுள்ள அலுமினிய தகடுகள் முற்றிலும் சேதமடைந்து பெட்டியினை மீண்டும் பழுது நீக்க முடியாத நிலையில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, அம்மா உணவகத்திற்கு புதிய D-Freezer கொள்முதல் செய்ய ஆகும் செலவினம் ரூ.26,000/– ஐ பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.0265 /2023/இ1

**தீர்மான எண்.63 நாள். 30.03.2023**

அனுமதிக்கப்பட்டது.